தினமலர்
உண்மையின் உரைகல்

## சென்ற 2011-12ம் நிதி ஆண்டில்... பாசுமதி அரிசி ஏற்றுமதி 32 லட்சம் டன்னாக அதிகரிப்பு

ஜூலை 20,2012,01:12



புதுடில்லி:கடந்த 2011-12ம் நிதியாண்டில், நாட்டின் பாசுமதி அரிசி ஏற்றுமதி, 32.10 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. முந்தைய நிதியாண்டில், இதன் ஏற்றுமதி, 21.80 லட்சம் டன்னாக இருந்தது என, வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (அபிடா) தெரிவித்துள்ளது.சர்வதேச அளவில், அரிசி ஏற்றுமதியில் இந்தியாவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவிற்கு உள்ளது. சென்ற நிதியாண்டில், இந்திய பாசுமதி அரிசி ஏற்றுமதிக்கு, பாரம்பரிய சந்தைகளாக திகழும் மேற்காசிய நாடுகளில், இதற்கான தேவை சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது.

ரூபாய் மதிப்பு:சென்ற நிதியாண்டில், பாசுமதி அரிசி ஏற்றுமதி, ரூபாய் மதிப்பின் அடிப்படையில் 46 சதவீதம் வளர்ச்சி கண்டு, 12,450 கோடியிலிருந்து, 16,100 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. டாலர் மதிப்பின் அடிப்படையில் இதன் ஏற்றுமதி, 29 சதவீதம் வளர்ச்சி கண்டு,249 கோடி டாலரிலிருந்து,322 கோடி டாலராக உயர்ந்துள்ளது.

அமெரிக்க டாலருக்கு எதிரான ரூபாயின் வெளி மதிப்பில் ஏற்பட்ட மாறுபாடுகளால்,டாலர் மதிப்பிலான ஏற்றுமதி வருவாய் சற்றே அதிகரித்துள்ளது."தற்போது, இந்தியாவிலிருந்து,மாதம் ஒன்றுக்கு மூன்று லட்சம் டன் என்றளவில் பாசுமதி அரிசி ஏற்றுமதி செய்யப்படுகிறது' என,பாசுமதி அரிசியை அதிகளவில் ஏற்றுமதி செய்து வரும் முன்னணி நிறுவனத் தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**கட்டுப்பாடு நீக்கம்:**மத்திய அரசு, பாசுமதி அரிசி ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில், அதன் மீதான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை நீக்கியது. இதனால் இதன் ஏற்றுமதி அதிகரித்துள்ளது.மேலும், ஈரான் நாடும் இந்திய பாசுமதி அரிசியை அதிக அளவில் இறக்குமதி செய்து வருகிறது.கடந்த 2008-09ம் ஆண்டில்,15.50 லட்சம் டன் பாசுமதி அரிசி ஏற்றுமதி மூலம்,9,447 கோடி ரூபாய் வருவாய் கிடைத்தது.2009-10ம் ஆண்டில், 10,889 கோடி ரூபாய் மதிப்பிற்கு 20.10 லட்சம் டன் பாசுமதி அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டது. 2010-11ம் ஆண்டில், 21.80 லட்சம் டன் பாசுமதி அரிசி ஏற்றுமதி மூலம் 10,578 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டது. இதனிடையே, இந்திய பாசுமதி அரிசி இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட தடையை சீனா நீக்கியுள்ளதும், அதன் ஏற்றுமதி அதிகரிக்க வழிவகுத்துள்ளது. இருப்பினும், கணக்கீட்டு ஆண்டுகளில், டாலர் மதிப்பில் ஏற்பட்ட, ஏற்ற, தாழ்வுகளால் ஏற்றுமதி வருவாய் மதிப்பு சற்று குறைந்துள்ளது.

**ஏற்றுமதிக்கு அனுமதி:**சென்ற நிதியாண்டில், நாட்டின் மொத்த பாசுமதி அரிசி ஏற்றுமதியில், ஈரான், ஐக்கிய அரபு நாடுகள், சவுதி அரேபியா ஆகிய நாடுகளின் பங்களிப்பு மிகவும் அதிகமாக உள்ளது.சென்ற நிதியாண்டில், பாசுமதி சாராத இதர வகை அரிசி ஏற்றுமதி, 50 லட்சம் டன்னை தாண்டியுள்ளது.உள்நாட்டில், நெல் உற்பத்தி சிறப்பாக வளர்ச்சி கண்டதை அடுத்து, மத்திய அரசு, கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம், பாசுமதி அல்லாத சாதாரண வகை அரிசி ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கியது.

சென்ற வேளாண் பருவத்தில், உள்நாட்டில், 10.20 கோடி டன் நெல் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், இதன் உற்பத்தி, இலக்கை தாண்டி, 10.43 கோடி டன்னாக அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஆப்ரிக் காவை சேர்ந்த நைஜீரியா மற்றும் கானா நாடுகள், இந்தியாவின் சாதாரண வகை அரிசி ஏற்றுமதிக்கு முக்கிய சந்தை களாக திகழ்கின்றன. சென்ற நிதியாண்டில், பாசுமதி மற்றும் சாதாரண அரிசி வகைகளின் ஒட்டுமொத்த ஏற்றுமதி, 73 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.

வட மாநிலங்களில், பருவ மழை தாமதமானதால், பாசுமதி சாராத இதர நெல் வகைகள் குறைந்த அளவிலேயே பயிரிடப்பட்டுள்ளன. பெரும்பாலான பகுதிகளில் விதைப்பு காலம் முடிவடைந்து விட்டது. எனினும், வரும் ஆகஸ்ட் 10ம் தேதி வரை நடவுப் பணிகள் நடைபெறும் என்பதால், விவசாயிகள், லாபம் தரும் பாசுமதி நெல் வகைகளுக்கு மாறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், பாசுமதி நெல் பயிரிடும் பரப்பளவும் கணிசமாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பஞ்சாப்:பாசுமதி அரிசி விலை,சென்ற ஆண்டை விட, நடப்பாண்டில் 60 சதவீதம் அதிகரித்துள்ளது. இதன் காரண மாகவும், பல விவசாயிகள் பாசுமதி நெல் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதன் விளைவாக, நடப்பு நிதியாண்டில், பாசுமதி அரிசி உற்பத்தியும், ஏற்றுமதியும் சிறப்பான அளவில் வளர்ச்சி காணும் என மதிப்பிடப் பட்டுள்ளது.கடந்த ஆண்டு,

பஞ்சாப், ஹரியானா மற்றும் உத்தர பிரதேச மாநிலங்களில், 15.50 லட்சம் ஹெக்டேரில், பாசுமதி அரிசி பயிரிடப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

---

தினகரன்

பண்ணை குட்டை அமைத்ததில் முறைகேடு விவசாயிகள் குற்றச்சாட்டு

பதிவு செய்த நேரம்:2012-07-21 12:21:04

சிவகங்கை, : பண்ணை குட்டை திட்டத்தில் பல்வேறு முறைகேடுகள் நடந்து வருவதாக விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

சிவகங்கையில் நேற்று விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. கலெக்டர் ராஜாராமன் தலைமை வகித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன் றிய செயலாளர் சந்திரன் கூறுகையில், “வேளாண்மை செயற்பொறியாளர் அலுவலகம் மூலம் பண்ணை குட்டை அமைக்கப்பட்டு வருகிறது. இந்த பண்ணை குட்டை அமைக்க ஒரே ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தம் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் விவசாயிகளிடம் பணம் வசூலிப்பது உள் ளிட்ட பல்வேறு முறைகேடுகள் நடந்து வருகின்றன“ என்று தெரிவித்தார். இது குறித்து டி.ஆர்.ஓ. விசாரித்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென கலெக்டர்

பண்ணை குட்டை அமைக்க கோரி வேளாண் மைத் துறையை சேர்ந்த ஒரு அதிகாரியிடம் மனு கொடுத்ததாகவும், அந்த திட்டம் வீணானது என்று கூறி அவர் மனுவை வாங்க மறுத்ததாகவும் விவசாயி ஒருவர் புகார் தெரிவித்தார். மனுவை வாங்க மறுத்த அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்குமாறு வேளாண்மைத் துறை அதிகாரிகளுக்கு கலெக்டர் உத்தரவிட்டார்.

கரும்புகள் வெட்டுவதற்கு காலதாமதம் ஆவதாகவும், வெட்டிய கரும்புகளுக்கு உரிய தேதியில் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்றும் விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் ஆதிமூலம் கூறி னார். கொள்முதல் செய்யப்பட்ட விதை நெல்லுக்கு இதுவரை பணப்பட்டு வாடா செய்யப்படவில்லை என்று விவசாயிகள் தெரிவித்தனர். இது குறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக கலெக்டர் தெரிவித்தார்.

ஆழ்த்துளை கிணறு அமைத்து 2 வருடங்களுக்கு மேலாகியும் இதுவரை மானியத் தொகை வழங்கப்படவில்லை என்று விவசாயிகள் சிலர் தெரிவித்தனர். ஆழ்துளை கிணறு அமைக்கும்

திட்டத்தில் மானியத் தொகை பெறுவதற்கு 235 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகவும், அந்த பட்டியலில் பெயர் இருந்தால் மானியத் தொகை உடனடியாக கிடைக்கும் என கலெக்டர் தெரிவித்தார்.
கூட்டுறவு மண்டல இணைப்பதிவாளர் காந்திநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் தனபால், வேளாண்மை இணை இயக்குநர் தட்சிணாமூர்த்தி, மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் யசோதாதேவி கலந்து கொண்டனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 75.53 அடி

பதிவு செய்த நேரம்:2012-07-21 11:38:54

மேட்டூர், : காவிரி நீர்பிடிப்பு பகுதியில் மழை இல்லாததால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு குறைந்து வருகிறது. நேற்று மாலை நிலவரப்படி விநாடிக்கு 715 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.
நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி மாவட்டங்களின் குடிநீர் தேவைக்காக, அணையிலிருந்து வினாடிக்கு 1,167 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. அணையின் நீர்மட்டம் நேற்று மாலை 75.53 அடியாக இருந்தது. நீர் இருப்பு 37.64 டி.எம்.சி.

## சேலத்தில் பயிர்களை நாசப்படுத்தும் காட்டுப்பன்றிகளை சுட்டுத்தள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் கோரிக்கை

பதிவு செய்த நேரம்:2012-07-21 11:12:41

சேலம், : சேலம் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிர்களை நாசப்படுத்தும் காட்டுப்பன்றிகளை சுட்டுத்தள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் கோரிக்கை வைக்கப்பட்டது.
சேலம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நேற்று கலெக்டர் மகரபூஷணம் தலைமையில் நடந்தது. கலெக்டர் அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பிரசன்னவெங்கடேசன் முன்னிலை வகித்தார். சென்ற மாத கூட்டத்தில் வைக்கப்பட்ட கோரிக்கைகள் மீதான தீர்வு மற்றும் விவசாயம் சார்ந்த புதிய திட்டப்பணிகள் குறித்து அதிகாரிகள் விளக்கம் அளித்தனர். தொடர்ந்து விவசாயிகள் பல்வேறு கோரி க்கைகளை முன்வைத்து பேசினர்.
கோவிந்தராஜ்: விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று தற்போது மஞ்சளுக்கு ஆதார விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதே போல் சேலம் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள மரவள்ளிக்கும் அரசு, ஆதாரவிலை நிர்ணயம் செய்ய வேண்டும். ஏரி மண்ணை

விவசாயிகள் பயன்படுத்த அனுமதி வழங்க வேண்டும்.
சண்முகம்: ரசாயன உரங்களால் மண் வளம் சிதைந்து விட்டதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனவே இயற்கையாக கிடை க்கும் பசுந்தாள் உரங்களை வேளாண்மைத்துறை மூலம் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். பனமரத்துப்பட்டியில் கால்நடை மருந்தகம் துவங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வாழப்பாடி சந்தையில் சிலர், விவசாயிகளை மிரட்டி விற்கும் பொருளின் மதிப்பை விட, கூடுதலாக சுங்கம் வசூலித்து வருகின்றனர். இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
ராஜமாணிக்கம்: சேலம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பயிர்களை நாசப்படுத்தும் காட்டுப்பன்றிகளின் நடமாட்டம் அதிகமாக உள்ளது. வருடத்திற்கு 40 முதல் 50 குட்டிகளை ஈன்றெடுக்கும் காட்டுப்பன்றிகள் ஒன்றும் அரியவகை உயிரினம் அல்ல. இரண்டு பன்றிகள் சேர்ந்தால் ஒரு ஏக்கர் பயிரை சாதாரணமாக துவம்சம் செய்து விடுகிறது. இதில் அவை உண்பது 10 சதவீதம் மட்டும் தான். 90 சதவீதம் பயிர்களை நாசப்படுத்தும் வேலையை செய்கின்றன. எனவே காட்டுப்பன்றிகளை சுட்டுத்தள்ள மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் விவசாயிகளுக்கு அனுமதி வழங்க வேண்டும்.
சுந்தரம்: தற்போது விவசாயத்தில் ஈடுபட்டுள்ள அனைவரும் 60 வயது நெருங்குபவர்கள். படித்த இளைஞர்களிடம் விவசாயம் செய்ய ஆர்வம் இல்லை. நவீன நுட்பங்களுடன் அவர்களை யும் விவசாயத்தில் ஈடுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
கோவிந்தசாமி: 30 வருடமாக விவசாயம் வர்த்தகர்களின் கையில் சிக்கி, சீரழிந்து வருகிறது. இதை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். மரவள்ளிக்கு விலை நிர்ணயம் செய்வதற்கான முத்தரப்பு கூட்டத்தை உடனடியாக கூட்ட வேண்டும்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம் 26ம் தேதி நடக்கிறது

பதிவு செய்த நேரம்:2012-07-21 10:18:37

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரியில் வருகின்ற 26ம் தேதி விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுகிறது.
கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வருகின்ற 26ம் தேதி காலை 11 மணிக்கு விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுகிறது. இந்த கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர் மகேஸ்வரன் தலைமை வகிக்கிறார். கூட்டத்தில் அனைத்து விவசாயிகளும் கலந்து கொண்டு தங்கள் குறைகளை தெரிவித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் அலுவலக செய்திக்குறிப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## கொப்பரை தரத்தை உயர்த்த வேண்டும் விவசாயிகளுக்கு அதிகாரி அறிவுரை

பதிவு செய்த நேரம்:2012-07-21 11:47:47

உடுமலை, :கொப்பரையின் தரத்தை உயர்த்த வேண்டுமென விவசாயிகளுக்கு அதிகாரி அறிவரை வழங்கினார்.உடுமலை வட்டாரத்தில் கொப்பரை அ¬ டயாள அட்டை பெறுவதற்காக ஏராளமான விவசாயிகள் விண்ணப்பித்திருந்தனர். அவர்களின் விண் ணப்பங்களை உடுமலை உதவி வேளாண்மை இயக்குனர் மகாலிங்கம், வேளா ண்மை அலுவலர் கவிதா, உதவி வேளாண்மை அலுவ லர் வைரமுத்து ஆகி யோர் ஆய்வு செய்தனர்.

ஆய்வை தொடர்ந்து உதவி வேளாண்மை இயக்குனர் மகாலிங்கம் கூறியதாவது:தென்னை விவசாயிகள் அடையாள அட்டை கேட்டு விண்ணப்பிக்கும் போது சிட்டா, அடங்கல், உரிமைச்சான்று போன்ற ஆவணங்களை கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெற்று விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பம் கொடுத்து வரிசை எண் ணுடைய அடையாள அட்டையை வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்திலிருந்து பெற்றதும், அவ்வட்டைகளில் விவசாயிகளின் மொத்த பயிர் சாகுபடி பரப்பு, தென்னை சாகுபடி பரப்பு முதலிய விவரங்களை விடுபடாமல் பூர்த்தி செய்து கிராம நிர்வாக அலுவலரின் கையொப்பம் பெற வேண்டும்.

நில உரிமை சான்றில் விவசாயிகளின் தென்னை சாகுபடி பரப்பு விவரமும் பலன் தரும் தென்னையின் விவரமும் தவறாது குறிப்பிட்டு கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று பெற வேண்டும்.

அதன்பின்னர் உதவி வேளாண் அலுவலர், வேளாண் அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் ஆகியோர் தென்னந்தோப்பினை ஆய்வு செய்து கொப்பரை உற்பத்தி அளவினை கணக்கிட்டு தென்னை விவசாயி அடையாள அட்டையை வழங்குவார்கள்.தமிழக அரசு விவசாயிகளிடமிருந்து முதல் தர கொப்பரையை மட்டும் கொள்முதல் செய்து வருவதால் விவசாயிகள் கொப்பரை தரத்தை உயர் த்தும் வகையில் தென்னை மரங்களை முறையாக பராமரிக்க வேண்டும்.

மேலும் அனை த்து விவசாயிகளும் தங்களின் நிலத்தில் மண்ணையும், நீரையும் கண்டிப்பாக பரிசோதனை செய்து ஆய்வு சிபாரிசு படி உர மேலாண்மை மேற்காள்ள வேண்டும்.இவ்வாறு மகாலிங்கம் கூறினார்.

## வீட்டில் தோட்டம் அமைக்க 50 சதவீத மானியத்தில் காய்கறி விதை வழங்கல்

பதிவு செய்த நேரம்:2012-07-21 10:09:11

க.பரமத்தி, : க.பரமத்தியில் நடந்த குறைதீர் கூட்டத்தில் வீட்டில் காய் கறி தோட்டம் அமைக்க 50 சதவீத மானியத்தில் விதை வழங்கப்பட்டது.

கரூர் மாவட்டம் க.பர மத்தி வேளாண்மை விரிவா க்க மைய கூட்ட அரங்கில் வட்டார அளவிலான விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நேற்று நடைபெற் றது. துணை வேளாண்மை அலுவலர் வடிவேல் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் வேளா ண்மை துறை மூலம் நடப்பாண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கி கூறப்பட்டது.

தோட்டக்கலை துறை சார்பில் ஆடிப்பட்ட காய்கறி சாகுபடி மற்றும் தோட்டக்கலை பயிர் சாகு படிக்கு அரசு வழங்கும் மானிய உதவிகள், மானிய விலையில் தற்பொழுது விவசாயிகளுக்கு வழங்கப்படும் காய்கறி விதைகள் குறித்து தோட்டக்கலை துணை அலுவலர் ஜெய ராமன் விளக்கி பேசினார். மேலும் வீட்டுக்காய்கறி தோட்டம் அமைக்க 50 சதவீத மானிய விலையில் காய்கறி விதைகளை விவசாயிகளுக்கு வழங்கினார். விவசாயிகளின் பல்வேறு வகையான சந்தேகங்களுக்கு அதிகாரிகள் பதிலளித்தனர். கூட்டத்தில் ஒன்றியத்திற்கு பல்வேறு பகுதிகளை சேர்ந்த 20க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## போதிய மழை இல்லாததால் நிலக்கடலையை தவிர்த்து உளுந்து பயிரிடலாம் வேளாண் அதிகாரி யோசனை

பதிவு செய்த நேரம்:2012-07-21 11:04:42

ஆலங்குடி : புதுக்கோட்டை மாவட்டத்தில் போதிய மழை இல்லாததால், நிலக்கடலையை தவிர்த்து, உளுந்து, பயறு வகை பயிர்களை பயிரிடலாம் என்று வேளாண் அதிகாரி விவசாயிகளுக்கு யோசனை தெரிவித்துள்ளார்.

ஆலங்குடி அருகே உள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் கீதா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை வழக்கத்தை விட 4 வார காலம் தாமதமாக பெய்ய தொ டங்கி சராசரி மழையளவான 88மி.மீ அளவுக்கு பதில் 20மி.மீ மட்டுமே பெய்துள்ளது. வழக்கமாக புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் 12,900 எக்டேர் பரப்பளவிற்கு மானாவாரியில்

நிலக்கடலை சாகுபடி செய்யப்படும். ஆனால் இந்த ஆண்டு காரிப் பருவத்தில் மழை தாமதமாக பெய்ய தொடங்கியுள்ளதால் விவசாயிகள் நிலக்கடலைக்கு பதில் மண்ணில் இருக்கும் ஈரப்பதத்தை பயன்படுத்தி குறுகிய கால மற்றும் வறட்சியை தாங்கி வளரக்கூடிய பயறுவகைகளை பயிரிட்டு லாபம் பெறலாம். இதில் உளுந்து பயிரில் வம்பன் 4, வம்பன் 5 ரகங்களையும், பாசி பயிரில் வம்பன் 3 என்ற ரகத்தையும் தேர்வு செய்து உடனடியாக விதைக்கலாம்.

மேலும் ஆவணி, புரட்டாசி மாதங்களில் சம்பா நெல் நடவுக்கு தயாராக உள்ள நிலங்களில் இந்தப் பருவத்தில் கிடைக்கும் மழையை பயன்படுத்தி சணப்பை விதைகளைத் தெளித்து 45வது நாளில் மடக்கி உழுவதன் மூலம் மண்வளத்தையும் மேம்படுத்தலாம்.

## இலவச ஆடு, மாடு விநியோகம் ஜூலை 25ல் சிறப்பு கிராமசபை கூட்டம்

பதிவு செய்த நேரம்:2012-07-21 12:27:42

விருதுநகர், : மாவட்டத்தில் இலவச ஆடு, மாடுகள் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் பெறுவதற்காக, வரும் 25ம் தேதி 27 கிராமங்களில் சிறப்பு கிராமசபை கூட்டங்கள் நடைபெற உள்ளன.

கூட்டம் நடைபெறும் கிராமங்கள் விபரம்: அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் குல்லூர் சந்தை, காரியாபட்டி ஊராட்சி ஒன்றியத்தில் கம்பிக்குடி, நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் கட்டனுர், கீழக்கொன்றைக்குளம், கொட்டக்காச்சியேந்தல், சாத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கன்குடி, கோசுக்குண்டு, திருச்சுழி ஒன்றியத்தில் குச்சம்பட்டி, விருதுநகர் ஒன்றியத்தில் குருமூர்த்திநாயக்கன்பட்டி, இனாம் ரெட்டியபட்டி, ராஜபாளையம் ஒன்றியத்தில் கிழவிகுளம், இளந்திரைகொண்டான் ஆகிய கிராமங்களில் கூட்டம் நடைபெறும்.

சிவகாசி ஒன்றியத்தில் கவுண்டம்பட்டி, காரிசேரி, கொத்தனேரி, குமிழங்குளம், காளையார்குறிச்சி, கட்டச்சின்னம்பட்டி, கிருஷ்ணப்பேரி, மாரனேரி, திருவில்லிபுத்தூர் ஒன்றியத்தில் கலாங்காபேரி, இனாம் நாச்சியார்கோவில், வெம்பகோட்டை ஒன்றியத்தில் கங்கரக்கோட்டை, கங்கர்சேவல், கே.மடத்துப்பட்டி, கல்லமநாயக்கன்பட்டி கிராம ஊராட்சிகளில் வரும் ஜூலை 25ம் தேதி காலை 11 மணிக்கு சிறப்பு கிராம சபைக்கூட்டம் நடைபெற உள்ளது.

1,135 பயனாளிகள் தேர்வு செய்வதற்காக கிராம அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கூட்டத்தில் திட்டம் குறித்த விரிவான விவரங்கள் தெரிவிக்கப்படும்.

மேலும் கிராமங்களில் ஜூலை 25ம் தேதி முதல் 31ம் தேதி வரை விண்ணப்பங்கள் பெறப்படும். தகுதியான பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, ஆகஸ்ட் 2ம் தேதி காலை 11 மணிக்கு நடைபெறும்

சிறப்பு கிராமசபையில் ஒப்புதலுக்காக முன் வைக்கப்படும் என சிறப்பு செயலாக்க திட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

## விவசாய அபிவிருத்தி நிதி பயன்பாட்டில் முறைகேடு

பதிவு செய்த நேரம்:2012-07-21 12:27:36

விருதுநகர், : `தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாய பணிகளுக்கு மானிய வட்டியில் கடன் வழங்கப்படுவதில்லை. விவசாய அபிவிருத்தி திட்ட நிதி பயன்பாட்டில் முறைகேடு நடைபெறுகிறது என விவசாயிகள் கலெக்டரிடம் புகார் தெரிவித்தனர்.

விருதுநகர் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர்(பொ) ராஜூ தலைமையில் நடந்தது. வேளாண்துறை இணை இயக்குநர்(பொ) முருகதாஸ் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் விவசாயிகள் கூறுகையில், `மாவட்டத்தில் தொடக்க வேளாண்மை வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளுக்கு நகைக்கடன்கள், பண்ணை சாரா கடன்களும் வழங்கப்படுவதில்லை. மானிய கடன்களும் விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை. அதிகாரிகளுக்கு வேண்டப்பட்ட தொழில் அதிபர்கள், வியாபாரிகள், ஆசிரியர்கள் கடன் பெற்றுச் செல்கின்றனர். விவசாயிகள் வட்டி மானியக்கடன்கள் எதுவும் பெற முடியவில்லை என தெரிவித்தனர்.

கூட்டுறவு சங்க தனி அலுவலர் சரஸ்வதி கூறுகையில், `மாவட்டத்தில் 182 தொடக்க வேளாண்மை  சங்கங்கள் மூலம் பயிர்க்கடன், நகைக்கடன் வழங்கப்படுகிறது. கடந்த மார்ச் 31ம் தேதி வரை ரூ.68.47 கோடி பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 3 ஆண்டுகளாக பண்ணை சாரா கடன் வழங்கப்படவில்லை. தகுதி அடிப்படையில் கடன் வழங்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. பிரச்னை உள்ள சங்கங்கள் குறித்து தெரிவித்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

விவசாயிகள் கூறுகையில், `தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகளுக்கு நகைக்கடன் வழங்க,  10(1) அடங்கல் பெற்று வழங்க வேண்டும். இதற்கு வட்டி மானியம் உள்ளது. ஆனால் வங்கி அதிகாரிகள் விவசாயத்திற்கு தரவேண்டிய கடனை அரசு அதிகாரிகள், அலுவலர்கள், ஆசிரியர்கள், வியாபாரிகளுக்கு வழங்குகின்றனர். பட்டா எதுவும் வாங்குவதில்லை. மத்திய விவசாய அபிவிருத்தி திட்டத்திற்கு வழங்கும் நிதி முறைகேடாக பயன்படுத்தப்படுகிறது. நகைகளை தரம்பார்க்கும் அலுவலர்கள் பெயரில் கணிசமான கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால், அதற்கான ரசீது வழங்கப்படுவதில்லை.

கலெக்டர்(பொ) ராஜூ கூறுகையில், `விவசாய பணிகளுக்காக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் நகைக்கடன் பெறுவதற்கு, நகை சரிபார்க்கும் அலுவலருக்கு பெறப்படும் தொகைக்கான ரசீது வழங்க  மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் மூலம் நடவடிக்கை

எடுக்கப்படும்.
விவசாய நகைக்கடன் தொகையை, தவறாக பயன்படுத்தும் வங்கிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். வடகிழக்கு பருவமழை துவங்குவதற்கு முன்பு, பொதுப்பணித்துறை கண்மாய் பழுதுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். கூட்டத்தில் கூட்டுறவு சங்க இணைப் பதிவாளர் சுப்பிரமணியன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## சிறுதானிய உற்பத்தி அதிகரிக்க நடவடிக்கை நல்லசாமி வலியுறுத்தல்

பதிவு செய்த நேரம்:2012-07-21 10:06:43

கரூர், : சிறுதானிய உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நல்லசாமி வலியுறுத்தினார்.
இந்திய மக்கள் இயக்க தலைவர் நல்லசாமி நேற்று கரூரில் நிருபர்களுக்கு அளி த்த பேட்டி: கள்ளுக்கான தடையை நீக்குவேன் என்று  சட்டப்பேரவை தேர்தலின் போது அளித்த வாக்குதியை முதல்வர் ஜெயலலிதா நிறைவேற்ற வேண்டும். 31 சதவீதம் வரை தென்மேற்கு பருவ மழை குறைந்து விட்ட தாக மத்திய அமைச்சர் சரத்பவார் கூறியுள்ளார். வெளி நாட்டில் இருந்து வேளாண் விளை பொருட்களை இறக்குமதி செய்வதை நிறுத்த வேண்டும். தென் மேற்கு பருவமழை 50 நாட்களாகி யும் வராததால், ஜூன் 12ல் மேட்டூர் அணையை திறக்க முடியவி ல்லை. தமிழ்நாட் டில் எந்த நீர்த்தேக்கத்திலும் தண்ணீர் இருப்பு திருப்திகரமாக இல்லை. இதற்கு மத்திய, மாநில அரசுகள் போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண் டும்.
மேட்டூர், வைகை, கீழ்பவானி அணைகள் குடிநீருக்கு மட்டும் திறக்கப்பட்டுள்ளன. தென்மேற்கு பருவ மழையின் பிற்பகுதியிலும் மழை இல்லாவிட்டால், உணவுப்பஞ்சம் ஏற்படும். வறட்சி, பஞ்சத்தில் இருந்து மக்களை காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண் டும். கேழ்வரகு, கம்பு, வரகு, திணை, சாமை சாகுபடியை அதிகப்படுத்த திட்டங்களை அறிவித்து ஊக்கப்படுத்த வேண்டும். சிறுதானிய உற்பத்தி அதிகரிக்க செய்யவேண்டும். வறட்சி, பஞ்சத்தில் இருந்து மக்களைக் காப்பாற்ற தமிழக அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

## பெரம்பலூரில் உற்பத்தியாளர்களுக்கு விதைச்சான்று பயிற்சி

பதிவு செய்த நேரம்:2012-07-21 11:01:19

பெரம்பலூர், :  பெரம்பலூரில் அரசு விதை உற்பத்தியாளர்களுக்கான விதைச்சான்று பயிற்சி வகுப்பு நடந்தது.
பெரம்பலூர் மாவட்டத்தில் அட்மா திட்டத்தின் கீழ் அரசுவிதை உற்பத்தியாளர்களுக்கான விதைச்சான்று பயிற்சி, வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் நேற்று நடந்தது.

பெரம்பலூர் விதைச்சான்று உதவிஇயக்குநர் முரளிதரன் வரவேற்றார். மாவட்ட வேளாண்மைத்துறை இணை இயக்குநர் (பொ) சுப்ரமணியன் பயிற்சியினை தொடங்கிவைத்து, பயிற்சிக் கையேட்டினை வெளியிட்டார்.

பெரம்பலூர் தோட்டக்கலைத்துறை துணைஇயக்குநர் சவுந்தர்ராஜன், உழவர் பயிற்சிநிலைய துணை இயக்குநர் ஆல்பர்ட் ஆகி யோர் பேசினர். விதைச்சான்று உதவி இயக்குநர் முரளீதரன், விதைஉற்பத்தியின் முக்கியத்துவம், விதைவகைகள், விதைப்பண்ணை பதிவு மற்றும் அங்ககச்சான்று பணி பற்றி விளக்கினர்.

பெரம்பலூர் விதைச்சான்று அலுவலர் பழனிச்சாமி, வயலாய்வு பணி, அறுவடைக்குப் பிந்திய ஆய்வு மற்றும் திறனாய்வுப்பணிகள் குறித்தும், அரியலூர் விதைச்சான்று அலுவலர் காசிநாதன், விதைசுத்தி நிலையம் உரிமம்பெறுதல், சுத்திப்பணிகள், சான்றுப்பணிகள் குறித்தும் பேசினர்.

பெரம்பலூர் விதைஆய்வாளர் இளங்கோவன் விதை ஆய்வுபணிகள் குறித்தும், விதைப் பரிசோதனைஅலுவலர் தெய்வீகன் விதை பரிசோதனைப்பணிகள் குறித்தும் விளக்கினர்.

பெரம்பலூர் விதைச்சான்று அலுவலர் பழ னிச்சாமி நன்றி கூறினார்.